# இயல் 7.1 - எண்ணியல்

பயிற்சி எண் :: 7.1.1.3.D

எண்கணிதச் செயல்பாடுகள் - முழுக்களில் கூட்டல் சமனி மற்றும் எதிர்மறை (Additive Identity & Inverse)

## எண்கணிதச் செயல்பாடுகள் - முழுக்களில் கூட்டல் சமனி மற்றும் எதிர்மறை (Additive Identity & Inverse)

ஒரு முழு எண்ணுடன் பூஜ்ஜியத்தைக் கூட்டினால் நமக்கு அந்த முழு எண்ணே கிடைக்கும். ஆகையால், பூஜ்ஜியம் எனும் எண் முழுக்களின் **கூட்டல் சமனி** என்றழைக்கப்படுகிறது. கீழ்காணும் சமன்பாட்டையும் அதன்பின் வரும் உதாரணங்களையும் கவனிக்க.

$$x + 0 = x$$

உதாரணம் :: **மிகை** முழுக்கள்

8 + 0 = 8 ✓

உதாரணம் :: **குறை** முழுக்கள்

-5 + 0 = -5 ✓

ஒரு முழு எண்ணுடன் வேறு ஒரு முழு எண்ணைக்கூட்டும் பொழுது நமக்கு விடையாக பூஜ்ஜியம் கிடைக்குமானால் அவ்விரு எண்களும் ஒன்றுக்கொன்று **கூட்டல் எதிர்மறை** என்றழைக்கப்படுகின்றன.

$$x + y = 0$$

8 + -8 = 0 ✓

-5 + 5 = 0 ✓

8 - ம் -8 - ம் ஒன்றுக்கொன்று **கூட்டல் எதிர்மறை**. அதேபோல் -5 - ம் 5 - ம் ஒன்றுக்கொன்று **கூட்டல் எதிர்மறை**.

பொதுவாகக்கூறுவோமாயின், $a$ எனும் ஒரு எண்ணின் கூட்டல் எதிர்மறை $-a$ ஆகும். அதேபோல், $-b$ எனும் ஒரு எண்ணின் கூட்டல் எதிர்மறை $b$ ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Wednesday 25th May, 2022 :: 08:26 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**